தினமலர்
04.09.2019,கோவைபக்கம்-2

# மாணவியருக்கான கால்பந்து: பாரதியார் பல்கலை அபாரம்




■ கோவை, அரசூரிலுள்ள கே.பி.ஆர்., கல்லூரியில் நேற்று கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டி நடந்தது; கோவை அரசு கலை கல்லூரி, ஈரோடு வெள்ளாளர் கல்லூரி அணியினர் போட்டியை சந்தித்தனர்.

**கோவை, செப். 4–**

கலை, அறிவியல் கல்லூரி மாணவியருக்கான கால்பந்து போட்டியில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கொங்கு கலை அறிவியல் கல்லூரி அணியும், கோவை அரசு கல்லூரி அணியும் வெற்றி பெற்றன.

கோவை பாரதியார் பல்கலையின் கீழுள்ள, கல்லூரி மாணவியருக்கான, மண்டல அளவிலான கால்பந்து போட்டி, அரசூர் கே.பி.ஆர்., கலை அறிவியல் கல்லூரியில் நேற்று நடந்தது. கோவை, திருப்பூர், ஊட்டி, ஈரோடு பகுதிகளில் இருந்து, 16 அணிகள் பங்கேற்றன. போட்டிகள், 'நாக்– அவுட் மற்றும் லீக்' முறையில் நடத்தப்பட்டன. போட்டியை கல்லூரி முதல்வர் பாலுசாமி துவக்கி வைத்தார். உடற்கல்வி இயக்குனர் ஸ்டாலின், ஒருங்கிணைந்தார்.

நேற்று நடந்த போட்டியில், கொங்கு கல்லூரி அணி, 4–1 என்ற கோல் கணக்கில், ஸ்ரீகிருஷ்ணா கல்லூரி அணியையும்; ஈரோடு வி.இ.டி., கல்லூரி அணி, 2–1 என்ற கோல் கணக்கில், ஏ.வி.பி., கல்லூரி அணியையும் வென்றன.

கோவை பாரதியார் பல்கலை அணி, 5–0 என்ற கோல் கணக்கில், கலைமகள் கல்லூரி அணியையும்; கோவை அரசு கலை அறிவியல் கல்லூரி அணி, 2–0 என்ற கோல் கணக்கில், வெள்ளாளர் கல்லூரி அணியையும் வென்றன. வெற்றி பெற்ற அணிகள், அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன.